**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.26/2019**

**Deposition of Witness for Prosecution PW 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழரசன் | Father's Name | : | நடேசன் |
| Village | : | உடையாலூர் | Taluk | : | கும்பகோணம் |
| Calling | : | | Age | : | 69 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 18th day of March 2026.**

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**முதல் விசாரணை**

நான் வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி மூப்பின் அடிப்படையில் பணி ஓய்வு பெற்று தற்போது உடையாலூரில் வசித்து வருகிறேன். கடந்த 22.08.2015 அன்று 21.00 மணிக்கு வலங்கைமான் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது வலங்கைமான் லாயம் மெயின் ரோட்டை சேர்ந்த உத்திராபதி மகன் சின்னப்பா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று வலங்கைமான் காவல் நிலைய கு.எண் 297/2017, இதச பிரிவுகள் 147, 148,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:10:36 +0530

294(பி), 341, 302 ன்கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.8**. வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் வலங்கைமான் காவல் நிலைய கு.எண்298/2015 வழக்கின் முதல் தகவலறிக்கையை நான்தான் பதிவு செய்தேன். மேற்படி கு.எண் 298/2015 வழக்கின் சம்பவ நாள், நேரம் 22.08.2015 அன்று இரவு 7.45 மணி என்றால் சரிதான். கு.எண்298/2015 ல் முதல் தகவல் கொடுத்தவர் முத்தையன், த/பெ.சௌரிராஜன் என்றால் சரி. இந்த வழக்கின் எதிரி முத்தையன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வலங்கைமான் மதிப்பு தெரு என்றால் சரி. வலங்கைமான் மதிப்பு தெரு, வெள்ளாள தெரு, பாபநாசம் ரோடு ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அருகருகே உள்ளன என்றால் சரி. கு.எண்298/2015 வழக்கில் காயம்பட்டவர்கள் முத்தையன் மற்றும் ஜெயராஜ் என்றால் சரி. கு.எண்298/2015 வழக்கில் எதிரிகளாக இருந்தவர்கள் பாலகுரு, அருண், நெடுமாறன் மற்றும் பிரகாஷ் என்றால் சரி. கு.எண்298/2015 வழக்கின் முதல் தகவலறிக்கை **எ.சா.ஆ.1**. கு.எண் 297/2015 என்ற இந்த வழக்கின் சம்பவம் நடந்த இடம் வலங்கைமான் மதிப்பு தெரு, 22.08.2015 அன்று இரவு 7.45

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:10:44 +0530

மணி என்றால் சரி. கு.எண் 297/2015 மற்றும் கு.எண் 298/2015 வழக்குகள் எதிரிடை வழக்குகள் என்றால் சரி. அ.சா.ஆ.8 னை யார் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. அ.சா.ஆ.8 பொய்யாக ஜோடிக்கப்பட்டது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:10:50 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.26/2019**

**Deposition of Witness for Prosecution PW 12**

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.மாலதி | Father's Name | : அங்குராஜ் |
| Village | : ஸ்ரீரங்கம் | Taluk | திருச்சி |
| Calling | : | Age | : 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 18th day of March 2026.**

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.08.2015 அன்று வலங்கைமான் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது வலங்கைமான் காவல் நிலைய கு.எண் 297/2015 வழக்கில் சம்மந்தப்பட்ட தினேஷ், வயது 21 என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வலங்கைமான் காவல் ஆய்வாளர் அவர்கள் காவலர் 1251 ராதா என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.18 15:11:00 +0530

அன்று காலை 11.25 மணிக்கு பிரேத பரிசோதனை செய்தேன். இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1) தலையில் வெட்டுகாயம் 7x3x2 cm அளவில் வலது பக்க தலையின் பின்புறம் வரை காணப்பட்டது. மண்டையோட்டில் உள்ள எலும்பில் விரிசல் காணப்பட்டது. மூளையின் தசைகள் வெளியே காணப்பட்டது. 2) வலது கையின் பின்புறம் சிராய்ப்பு காயம் 8x1 cm அளவில் காணப்பட்டது. 3) வலது முன் கையின் பின்புறம் வெட்டுகாயமானது முட்டியின் 10 செ.மீ. கீழ்நோக்கி 6x3x3 cm அளவில் எலும்புகள் தெரிந்தவாறு காணப்பட்டது. 4) வலதுபுறம் அடிவயிற்று பகுதியல் 2x2x0.5 cm அளவில் வெட்டு காயம் காணப்பட்டது. 5)வலது முட்டியில் ஒழுங்கான வெட்டுகாயம் 3x0.5x0.5 cm அளவில் காணப்பட்டது. 6) வலது முட்டியிலிருந்து 15 செமீ கீழ்நோக்கி சிதைந்தகாயம் 3x2 cm அளவில் காணப்பட்டது. 7) வலது கால் கட்டைவிரலின் பின்பகுதியல் வெட்டு காயம் 3x0.5 cm அளவில் காணப்பட்டது. 8) இடது புற இடுப்பின் 20 கீழ்நோக்கி வெட்டு காயமானது 2x1x0.5 செமீ அளவில் காணப்பட்டது. 9) வலது புற கணுக்காலில் வெட்டுகாயமானது 5x3x3 cm அளவில் எலும்பு தெரியும்படி காணப்பட்டது. 10) வலது பின்புற கையில் 3x2 செமீ ஆறிய தீகாயம் காணப்பட்டது. வலது கண் பாதி திறந்த நிலையில் காணப்பட்டது. இடது கண் மூடியிருந்தது. மூக்கு, காது சாதாரணமாகவும், வாய்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:11:08 +0530

பாதி திறந்த நிலையில் நாக்கு வெளியில் தெரிந்த நிலையிலும் காணப்பட்டன. கழுத்து, நெஞ்சு, வயிறு பகுதி சாதாரணமான நிலையில் இருந்தன. பிறப்புறுப்பு மலம் கழித்த நிலையில் சாதாரணமாக காணப்பட்டது. விரைப்பு தன்மை இரண்டு பக்க கைகளிலும் காணப்பட்டது. தலைப்குதியை கூராய்வு செய்து பார்த்ததில் மண்டையோட்டின் உள்பகுதியில் முன்பிற, பின்புற பகுதிகளில் ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டது. 7x3 செமீ அளவில் விரிசால் காயமானது வலது புற மண்டையிலும், பின் மண்டையிலும் காணப்பட்டது. மூளையின் உள்பகுதிவரை ரத்த கசிவு காணப்பட்டது. கழுத்தில் உள்ள Hyoid எலும்பு, நெஞ்சு எலும்பு, வயிற்று பகுதி சீராக இருந்தது. கல்லீரல், மண்ணீரல், கணையம், இரு புற சிறுநீரகம், இடுப்பு எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் பாதி செரித்த உணவுடன் காணப்பட்டது. பெருங்குடல் காற்று அடைத்து காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. உள்ளுறுப்புகள் அனைத்தும் வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. உள்ளுறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அறிவியல் ஆய்வகத்திலிருந்து T.No.9102 / 2015, TAN / TOX.H / 1102 / 2015, Dated 18.11.2015 Report -

The above five articles were examined but alcohol or other poison was not detected in

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:11:20 +0530

any of them என வரப்பெற்ற அறிக்கை **அ.சா.ஆ.9**. மேற்கூறிய நபர் தலையில் ஏற்பட்ட வெட்டு காயங்கள், மூளையின் உள்பகுதியல் ஏற்பட்ட அதிக இரத்தபோக்கினால் இறந்துள்ளார் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். நான் வழங்கிய இறுதி கருத்துரையுடன் கூடிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.10**. மேற்படி காயங்கள் அருவாளால் தாக்கப்பட்டால் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

கடந்த 22.08.2015 ம் தேதி நான் வலங்கைமான் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியலிருந்தபோது ஜெயராஜ், வயது 33, த/பெ. ஜெயராமன் என்பவரை உறவினர் அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருடைய இரத்த கொதிப்பு 90/60Mmhg, நாடி துடிப்பு 80/Min அளவுகள் சீரான நிலையில் இருந்தது. அவரை அடையாளம் தெரிந்த 10 நபர்களுக்கு மேல் தன்னை கத்தியால் இரவு 8.15 மணிக்கு (22.08.2015) வெள்ளாளர் தெரு அருகில் தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 2x1 செ.மீ. அளவிலான வெட்டு காயம் இடது அடிவயிறு பகுதியில் காணப்பட்டது. அன்றைய தினமே முத்தையன், வயது 28, த/பெ. சௌரிராஜன் என்பவரை உறவினர் அழைத்து வந்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:11:32 +0530

அவரை நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார் அவருடைய இரத்த கொதிப்பு 110/80 Mmhg, நாடி துடிப்பு 80/Min அளவுகள் சீரான நிலையில் இருந்தன. அவரை அடையாளம் தெரிந்த 10 நபர்களுக்கு மேல் தன்னை கத்தியால் இரவு 8.15 மணிக்கு (22.08.2015) வலங்கைமானில் உள்ள பாபநாசம் ரோடு அருகில் தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1) 5 x 3 செ.மீ. அளவிலான வெட்டுக்காயம் இடது முன்கையின் முன் பகுதியிலும் 2) 4 x 3 செ.மீ. அளவிலான வெட்டுக்காயம் இடது முழங் கையின் பின் பகுதியிலும் 3) 5 x 3 செ.மீ. அளவிலான வெட்டுக்காயம் இடது முன் தலையின் நெற்றி பகுதியிலும் காணப்பட்டன. பிறகு மேல் சிகிச்சைக்காக மேற்படி ஜெயராஜ் என்பவரை அறுவை சிகிச்சை பிரிவிற்கும் முத்தையன் என்பவரை எலும்பு சிகிச்சை பிரிவிற்கும் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி ஜெயராஜ் என்பவருக்கு நான் வழங்கிய கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு **எ.சா.ஆ.2**. மேற்படி முத்தையன் என்பவருக்கு நான் வழங்கிய கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு **எ.சா.ஆ.3**. முத்தையனுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றும் ஜெயராஜிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் சான்று வழங்கப்பட்டன. மேற்படி முத்தையன் மற்றும் ஜெயராஜ் சொன்ன நாள், நேரம், விதத்தில் மேற்படி காயங்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:11:38 +0530

ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றால் சரி. இவ்வழக்கில் சடலம் சடலக் கூறாய்விற்காக போலீசார் வேண்டுகோள் கடிதத்தோடு அனுப்பியிருந்தார்கள். அந்த வேண்டுகோள் கடிதத்தை பார்த்தால் அந்த சடலத்தோடு வேறு ஆவணங்கள் அனுப்பப்பட்டதா என்பது தெரியும் என்றால் சரி. அந்த வேண்டுகோள் கடிதம் பற்றி எனக்கு தெரியாது. சடலத்தை கூறாய்வு செய்யும்போது ஏற்பட்டிருந்த காயங்களை தனி தாளில் குறிப்புகளாக எழுதிக் கொண்டு பின்னர் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து பிரேத பரிசோதனை அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரி. அ.சா.ஆ.10 உண்மை தன்மை வாய்ந்ததல்ல என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.18 15:11:44 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.